1979 ஏப்ரல் 28]

வியாசர்பாடியில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்குக் குடியிருப்புகள்.

* **வினா எண் 863—திரு. சு. பாலன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வியாசர்பாடியில் பர்மா தமிழர்கள் வாழும் குடிசைகளை அகற்றி வீடுகள் கட்டும் திட்டம் எப்போது செயல்படும்?

(ஆ) அவர்களுக்கு கட்டவிருக்கும் வீட்டின் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) சென்னை நகரில், வியாசர் பாடி ஏரிப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய வர்கட்கு வீடு கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசின் வேலை, வீட்டு வசதி வழங்கு துறை மற்றும் மறுவாழ்வுத் துறை அமைச்சர் அவர்களது தலைமையில் தமிழக முதல்வர் அவர்களால் இத் திட்டத்திற்கு 28—9—1978 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டு விழா நடத்தப் பட்டு, வியாசர்பாடி ஏரிப் பகுதியைச் சீர் செய்து மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரால் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரால் வீட்டுக் கடன் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வீடுகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வீடுகள் கட்டும் பணி விரைவில் துவக்கப்படும்.

(ஆ) ஒவ்வொருத்தருக்கும் சுமார் 1,200 சதுர அடி வீட்டு மனை கொடுக்கவும், அதில் சுமார் 200 சதுர அடி பரப்பில் வீடு கட்டவும் திட்டமிடப்பட் டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, பர்மா தமிழர்கள் எத்தனை பேர் அங்கே கடைகள் வைத்து இருக்கிறார்கள்? எத்தனை பேருக்கு அரசாங்கக் கடன் கொடுக்கப்பட்டு இருக்கிறது? அரசாங்க உதவி தவிர பாங்க் லோன் கொடுக்கப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, பர்மா பஜாரில் 332 கடைகள் பர்மா தமிழர்களால் வைக்கப்பட்டு இருக்கிறது. இதில் கடன் வாங்கிய பர்மா தமிழர்கள் எண்ணிக்கை 247. அவர்களுக்கு வியாபாரக் கடன் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சாதாரணமாக பர்மாவிலிருந்து தாயகம் வரும் தமிழர்களுக்கு 'ரீப்பேட்ரியேட்ஸ்' வங்கி—அதாவது குடியமர்த்தப் பட்டவர்களுக்கு என்று நியமிக்கப்பட்டு இருக்கின்ற வங்கி மூலம் கடன்

கொடுக்கப்பட்டு வருகிறது. அதையும் தவிர பஞ்சாப் நேஷனல் பாங்க் மூலம் 120 குடும்பங்களுக்கு ரூபாய் 5 லட்சத்து 90 ஆயிரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதுவும் தவிர 68 குடும்பங்களுக்கு ரிப்பேட்ரியேட்ஸ் பாங்க் காரண்டி கொடுத்தது, அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை குடும்பங்கள் அந்த வீடு கட்டும் திட்டத்தால் பயன்பெற்று இருக்கிறார்கள்? எத்தனை பேர் இது வரையில் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, 3,132 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

மதுரை ராஜா மில் மின்சார கட்டண நிலுவை

*வினா எண் 864—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜா மில் நிர்வாகம் ரூபாய் 88 ஆயிரத்திற்குமேல் மின்சாரக் கட்டணம் பாக்கி கட்ட வேண்டியுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்தப் பணத்தை உடனடியாக வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மில் ஓடாத காலத்திற்கான மாதாந்திரக் குறைந்த அளவுக் கட்டணமான ரூபாய் 32,858.95 நிலுவையில் உள்ளது.

(ஆ) மின்சார வாரியம் உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அமைச்சர் அவர்கள் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அது மில் ஓடாத காலத்திற்கு என்று சொன்னார்கள். அதை வசூலிப்பதற்கு மின்சார வாரியம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அந்த மேனேஜ்மெண்ட் ரொம்ப நொடிந்து போய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தப் பணத்திற்கு ஆபத்து வர இருப்பதால் உடனடியாக அரசு வசூலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மில் ஓடாத 4½ ஆண்டுக் காலத்திற்கும் புதிய ஒப்பந்தம் சேர்த்து எழுதித் தருவதாகப் புதிய சொந்தக்காரர்கள் ஒப்புக் கொண்டதன் பேரில் மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய மின்சார வாரியம் உத்தேசித்துள்ளது. அதற்கான விவரங்கள் மதுரை மேற்பார்வையாளரிடம் இருந்து பெறப்பட்டு, மின் வாரியத்தின் பரிசீலனையில் தற்போது உள்ளது.